Registered as a news paper. பக்கங்கள்: எட்டு விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்


விமானம் மற்றும் கப்பல் மூலம்
உள்நாட்டு வெளிநாட்டிற்கான சிறியதோ, பெரியதோ,
எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை
எந்த நாட்டிற்கும் எந்தநேரமும்
குறைந்த கட்டணத்தில் அனுப்பிட
மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு 20 % விசேட சலுகை
லண்டனுக்கான 5 Kg பொதிக்கு 1 Kg க்கான கட்டணம் 500/=
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Ceylon Distributors) Tel - 021 222 7835 Fax - 021 222 7836
46, அடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310
36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. Tel - 021 226 4252 Fax - 021 226 4253
குகன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 22 2027 Fax - 021 226 2993



மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 வைகாசி 16 ஹிஜ்ரி 1427 ஜ அவ்வல் 02 (30.05.2006) செவ்வாய்க்கிழமை இதழ் 241


## ஐரோப்பிய யூனியன் புலிகள்மீது தடை!

பிரஷெல்ஸ்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தீவிரவாத இயக்கங்களின் பட்டியலில் சேர்த்துக்கொள்வதென பிரஷெல்ஸில் நேற்று நடைபெற்ற ஐரோப்பிய யூனியனின் அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

25 நாடுகளைக்கொண்ட ஐரோப்பிய யூனியனில் விடுதலைப் புலிகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதையடுத்து - அங்குள்ள புலிகளின் சொத்துக்கள் அனைத்தும் முடக்கப்படும் என ஐரோப்பிய யூனியன் அறிவித்துள்ளது.

அமெரிக்கா, கனடா, பிரிட்டன் ஆகிய நாடுகள் ஏற்கனவே புலிகள் அமைப்பின் மீது தடைவிதித்திருந்த நிலையில் ஐரோப்பிய யூனியனும், புலிகள்மீது பயணத் தடையை கடந்த செப்ரெம்பர் மாதம் விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பிய யூனியனின் தடைமுயற்சி இலங்கையின் சமாதான முன்னெடுப்புக் களை ஸ்தம்பிதமடையச் செய்யும் என விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எச்சரிக்கை செய்திருந்த நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

# தன்னாட்சியை வலியுறுத்தி 12 நாடுகளில் உரிமைக்குரல்!




யாழ்ப்பாணம்

தமிழர் தாயகத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் தமிழ்மக்கள் மீதான படுகொலைகளைக் கண்டித்தும் -

இந்த வன்முறைகள் குறித்து அரசாங்கத்தை சர்வதேச சமூகம் கண்டிக்க வலியுறுத்தியும் -

ஈழத்தமிழரின் தன்னாட்சி உரிமையை அங்கீக ரிக்கக்கோரியும் -

உலகிலுள்ள 12 நாடுகளில் உரிமைக்குரல் எழுச்சி நிகழ்வு நேற்று உணர்வெழுச்சியுடன் நடை பெற்றது.

அவுஸ்ரேலியா, கனடா, பிரிட்டன், ஜேர்மனி, பிரான்ஸ், நெதர்லாந்து, டென்மார்க், பின்லாந்து, சுவிஸ், நியூசிலாந்து, இத்தாலி ஆகிய நாடுகளில் பல்லாயிரக்கணக்கான புலம்பெயர் தமிழர்கள் இந்த எழுச்சி நிகழ்வில் பங்கேற்றனர்.

அவுஸ்ரேலிய தலைநகர் கன்பராவில் அமைந்




பிரான்ஸ், நெதர்லாந்து, டென்மார்க், பின்லாந்து, சுவிஸ், நியூஸிலாந்து, இத்தாலி ஆகிய நாடுகளில் பல்லாயிரக்கணக்கான புலம்பெயர் தமிழர்கள் இந்த எழுச்சி நிகழ்வில் பங்கேற்றனர்.

அவுஸ்ரேலிய தலைநகர் கன்பராவில் அமைந்துள்ள நாடாளுமன்றக் கட்டடத்துக்கு முன்பாக திரண்ட தமிழ் மக்கள் - அவுஸ்ரேலியாவே தமிழ் மக்களைக் காப்பாற்று (08 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. வேட்பாளர் நாவாந்துறையில் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம் —

நாவாந்துறைப் பகுதியில் ஈ.பி.டி.பி உள்ளூராட்சிசபை வேட்பாளர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் நாவாந்துறை - கடற்கரை வீதியைச் சேர்ந்த மைக்கல் யேசுதாசன் (வயது 70) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

நேற்று நண்பகல் 12.30 மணியளவில் வீட்டினுள் புகுந்த இனந்தெரியாத நபர்கள் மேற்படி நபரை (08 ஆம் பக்கம் பார்க்க)

## கடலுக்குச் சென்ற மீனவர்கள் சடலங்களாகக் கண்டுபிடிப்பு!

### அராலியில் சம்பவம்

யாழ்ப்பாணம் —

கடற்தொழிலுக்குச் சென்றவேளை காணாமற்போன மீனவர்கள் இருவர் - கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் நேற்றுமாலை அராலி மேற்கு கடற்பகுதியில் சடலமாக மீட்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் வட்டுக்கோட்டை அராலி மேற்கைச் சேர்ந்தவர்களான நாகராசா செல்வராசா (வயது 36), நடராசா நகுலேஸ்வரன் (வயது 26) ஆகிய இருவரது சடலங்களே கரையொதுங்கின.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை கடற்தொழிலுக்குச் சென்ற இருவரும் நேற்று நண்பகல்வரை திரும்பவில்லை. இதனால் அச்சமடைந்த இவர்களின் உறவினர்கள் தேடிச் சென்றவேளை கடற்கரையில் கை, கால்கள் இரண்டும் பின்புறமாகக் கட்டப்பட்ட நிலையில் இருவரின் சடலங்களும் (08 ஆம் பக்கம் பார்க்க)

## பேத்தாளையில் தாக்குதல்; இராணுவ கோப்ரல் பலி!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு-பேத்தாளையில் ரோந்து சென்ற படையினர் மீது நேற்று நடத்தப்பட்ட தாக்குதலில் இராணுவத்தரப்பில் லான்ஸ் கோப் ரல் ஒருவர் கொல்லப்பட்டார்.

நேற்றுப் பிற்பகல் 2.50 மணியளவில் பேத்தாளையில் வீதி துப்பரவாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச்சம்பவத்தில் இரு படையினர் காயமடைந்தனர். இவர்கள் உடனடியாக மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதும்- லான்ஸ் (08 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் தாக்குதல்; லான்ஸ்கோப்ரல் பலி!

வவுனியா —

வவுனியா - கோவில் புளியங்குளத்தில் இராணுவக் காவலரண்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் -இராணுவத் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டார்.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது;

கோவில் (08 ஆம் பக்கம் பார்க்க)

## குப்பிளானில் இளைஞர் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம் —

ஏழாலை கிழக்கு - குப்பிளான் பகுதியில் நேற்று சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வலி.வடக்கில் உயர்பாதுகாப்பு வலயத்தை அண்மித்த பகுதியான குப்பிளானில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் தேவராசா (வயது 30) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்றுக்காலை 10 மணியளவில் ஏழாலை-குப்பிளான் வீதியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் பொருட்கள் வாங்கிக்கொண்டு சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்தவேளை இவரைப் பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற மல்லாகம் மாவட்ட நீதிவான் சறோஜினி இளங்கோவன் விசாரணையை (08 ஆம் பக்கம் பார்க்க)

## மற்றுமொரு சிப்பாய் மட்டக்களப்பில் பலி!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு நகரிலுள்ள கள்ளியங்காட்டுப் பகுதியில் நேற்று இரவு 7.45 மணியளவில் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் இருவர் காயமுற்ற நிலையில் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக (08 ஆம் பக்கம் பார்க்க)

# உலகை உலுக்கிய உரிமைக்குரல்



பின்லாந்து



பின்லாந்து






ஹொலன்ட்



ஹொலன்ட்





டென்மார்க்



அவுஸ்ரேலியா



நியூஸிலாந்து



ஜேர்மனி



இத்தாலி





ஜேர்மனி




நோர்வே






ஜேர்மனி




சுவிஸ்





ஜேர்மனி


## கண்ணீர் அஞ்சலி

மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெறும் திருமதி ஜெ.தர்சினி அவர்களின் அன்புக் கணவர்

**சபாபதிப்பிள்ளை ஜெயபாலன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், விரிவுரையாளர்கள்
பயிற்சியாளர்கள், பணியாளர்கள்.
மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனம்,
வவுனியா.

(C/5361)

## சிறு விளம்பரங்கள்

### மணமகள் தேவை

யாழ்ப்பாணம் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் வருடம் உத்தர நட்சத்திரம், 1 ஆம் பாகம், பாதம் 33, செவ்வாய் தோஷ மற்ற, சிவில் பொறியியலாளருக்கு படித்த, சிவந்த, மெல்லிய, அழகான மணப்பெண்ணை பெற்றோர் தேடுகின்றனர். புகைப்படம், சாதகக் குறிப்புடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இலக்கம் 53, நமது ஈழநாடு, 267 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (2278)

### ஹோட்டல் குத்தகைக்கு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல்யமான ஹோட்டல் ஒன்று குத்தகைக்கு விடப்படும்.
தொடர்பு :- 0777178493

### மனோகரா யாழ்ப்பாணம்

சில தினங்களுக்கு மட்டும்
அஜித்குமார் - சதா
மற்றும் பலர்
நடித்த



திருப்பதி

காட்சி நேரம் 10.30,2.30,6.30,9.30

### நிறைஞ்சனாஸ் சங்கானை

சரத்குமார் – மீனா –
வடிவேல்
நடித்த

மாயி

காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30

### ராஜா யாழ்ப்பாணம்

பரத்,
பத்மபிரியா
ஆர்யா
மற்றும் பலர்
நடித்த



பட்டியல்
(புதிய வெளியீடு)

காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30

# இராணுவ வைத்தியசாலை மொறட்டுவவுக்கு மாற்றம்

கொழும்பு—

இராணுவத் தலைமையக வளாகத்திலுள்ள இராணுவ வைத்தியசாலை மொறட்டுவவுக்கு மாற்றப்படவுள்ளது.

தற்போது கொம்பனி வீதியில் இராணுவத் தலைமையகத்துடன் இணைந்ததாக இயங்கும் இராணுவ வைத்தியசாலையே மொறட்டுவவுக்கு மாற்றப்படவுள்ளது.

இதற்காக மொறட்டுவ - லுணுவவில் 4 ஏக்கர் நிலம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இங்கு வாழ்ந்த பல ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இந்த வைத்தியசாலை அமைப்புக்கு கடந்தவாரமே ஜனாதிபதி அனுமதி வழங்கினார். இராணுவத் தலைமையகத்துடன் இந்த வைத்தியசாலை அமைந்திருப்பதால், இராணுவத் தளபதிகளுக்கு பாதுகாப்பு இல்லை என்பதாலேயே இந்த மாற்றம் செய்யப்படுவதாக அரச தரப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன், இராணுவத் தலைமையகத்தில் இயங்கும் இராணுவ நலன்புரிப் பிரிவு திணைக்களம் அநுராதபுரத்துக்கு மாற்றப்பட முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இராணுவ மருத்துவப் பிரிவும், விளையாட்டுப் பிரிவும் இந்தப் பகுதிகளுக்கு மாற்றப்படவுள்ளன.

# ஒரேநாடு, பிளவுபடாத தேசம் மகிந்தவின் புதிய உபாயம்

கொழும்பு—

இலங்கையில் ''ஒரே நாடு - பிளவுபடாத தேசம்'' என்ற புதிய கோசத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்வைத்துள்ளார்.

அமரபுர சங்க சபாவின் 200ஆம் ஆண்டு விழா நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு பேசுகையிலேயே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக நிகழ்ச்சியில் பங்கேற்காத மகிந்த ராஜபக்ஷ செய்மதியூடாக உரையாற்றினார்.

# அகாஷியின் ஐ.நா.படை குறித்து விளக்கம் கோரும் பிக்குமுன்னணி

கொழும்பு—

இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப் படையை ஈடுபடுத்துவது குறித்து ஜப்பானிய விசேட தூதுவர் அகாஷி தெரிவித்ததாக கூறப்படும் கருத்துக்கு ஜப்பானிய அரசாங்கம் விளக்கம் அளிக்க வேண்டும் என்று தேசிய பிக்கு முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த விடயத்தில் ஜப்பான் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும் என்று பிக்கு முன்னணி தலைவர் தம்பர அமில தேரர் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப் படையை ஈடுபடுத்தினால் இலங்கை இரு தேசங்களாக பிளவுபடுவது உறுதியாகிவிடும் என்பதால், இலங்கையின் பிரிவினைவாத சக்திகள் இந்த முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

## ஐ.நா. அமைதிப்படை குறித்த

# ஐ.தே.கட்சியின் கருத்துக்கு அரசாங்கம் கடும்கண்டனம்



கொழும்பு—

இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப்படைகள் ஈடுபட நேரிடும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்திருந்த கருத்துக்கு அரசாங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து ஊடக அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா கூறியதாவது-

நாட்டினது மிக முக்கியமான விடயங்கள் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் கீழ்நிலைத் தலைவர்களை பேச அனுமதிப்பதன் மூலம் இந்த நாட்டின் இறைமைக்கும், பிரதேச ஒற்றுமைக்கும் ஆபத்து உருவாக்கப்படுகிறது.


ஐக்கிய தேசியக் கட்சி தங்களுக்கு வாக்களித்த மக்களுக்கு இந்த விடயத்தில் பதிலளிக்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்தவர்கள் களுத்துறை நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்திருந்த ஐ.நா.படை தொடர்பான கருத்தை ஆதரிக்கிறார்களா என்று கேட்க விரும்புகிறோம்.

ஒரு தேசியக் கட்சித் தரப்பிலிருந்து இத்தகைய பொறுப்பற்ற அறிக்கைகள் வெளியிடப்படுவது நாட்டை காட்டிக் கொடுப்பதாகும் எனத் தெரிவித்தார்.

ஆனால், பிரியதர்சன யாப்பாவின் குற்றச்சாட்டை மறுத்துள்ள சேனாரத்ன தற்போதைய நிலைமைகள் மிகவும் மோசமடைந்தால், ஏற்படும் விளைவுகளைத்தான் நான் கூறினேன். அது ஒன்றும் காட்டிக் கொடுக்கிற துரோகச் செயல் அல்ல எனத் தெரி வித்தார்.

# கடல் இறைமை குறித்து நோர்வே முடிவெடுக்கும்

## உல்ப் ஹென்றிக்ஸன்



கொழும்பு—

தமிழீழ விடுதலைப் புலிகளின் கடல் இறைமை குறித்து அனுசரணையாளர்களாகிய நோர்வேதான் இறுதி முடிவெடுக்கும் என்று போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் தெரிவித்தார்.

இலங்கை - சுவீடன் நட்புறவு சங்கத்தின் நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பேசிய ஹென்றிக்சன் -

இராணுவத்தில் கீழ் நிலையிலுள்ள படைத்தரப்பினருக்கும் துணை ஆயுதக் குழுவினருக்கும் தொடர்பிருக்கலாம் என்று அரச சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கொகன்ன ஒப்புக்கொண்டிருந்தமையை சுட்டிக்காட்டி, இராணுவத்தினருக்கும் துணை ஆயுதக் குழுவினருக்கும் இடையே தொடர்பிருப்பதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை, என்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்து வரும் கடல் இறைமை குறித்து நோர்வே முடிவு மேற்கொள்ள வேண்டும் என்றும் ஹென்றிக்சன் இந்த நிகழ்வில் தெரிவித்தார்.

# தற்கொலைதாரி பயன்படுத்திய செல்போன் டயலொக் 5 வலையமைப்பைக் கொண்டது

## என்கிறது கொழும்பு பத்திரிகை

கொழும்பு—

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா மீது தற்கொலைத் தாக்குதல் நடத்திய பெண் பயன்படுத்திய செல்போன் - டயலொக் 5 இலக்க வலையமைப்பைக் கொண்டதென கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகக் கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எம்.ஐ.6 இல் விசேட பயிற்சி பெற்ற தொலைத் தொடர்பு நிபுணர் ஒருவர் குண்டுதாரி பயன்படுத்திய சிம்காட்டை மீள்வடிவமைத்திருக்கிறார். தற்போது இந்தத் தொலைபேசி 5 இலக்க வலையமைப்புடன் கூடியதா என்று சந்தேகம் எழுந்துள்ளது.

அதேவேளை - குறித்த பெண் இராணுவ வைத்தியசாலைக்குள் நுழைவதற்கு அங்கு பணிபுரியும் ஊழியரான கோப்ரல் ஒருவரே உதவியுள்ளார் என வெளிவந்த தகவல்கள் பொய்யானதெனவும் கண்டறியப்பட்டுள்ளது.

குறிப்பிட்டகோப்ரல் குண்டு வெடிப்பில் பலியாகிவிட்டார். இவருக்கும், குண்டுதாரிப் பெண்ணுக்கும் தொடர்பிருந்ததாக வெளியான தகவல்கள் உண்மையல்ல என்றும் அவர் ஒரு அப்பாவி என்றும் தெரியவந்துள்ளது.

விடுதலைப் புலிகளின் கடந்த கால நடவடிக்கைகளைக் கொண்டே இந்த ஊகம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதேவேளை - இந்தத் தாக்குதலுக்கு இராணுவத் தலைமையகத்துக்குள் இருந்து உதவி கிடைத்ததென்ற சந்தேகம் புலனாய்வு அதிகாரிகளிடத்தில் வலுவாகவே உள்ளது. தெரிந்தோ தெரியாமலோ இந்தத் தாக்குதலுக்கு இராணுவத் தரப்பிலிருந்து உதவியிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இதேவேளை - இராணுவ வைத்தியசாலையில் விமானப் படையின் நிரந்தரப் படைப் பிரிவில் உள்ள பெண் சார்ஜன்ட் ஒருவர் கடந்த மூன்று மாதங்களாக இராணுவ வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காகச் செல்லாத நிலையிலும் அவரது பெயரில் ஒருவர் சிகிச்சை பெற்றுவந்தமை தெரியவந்துள்ளது.

இராணுவ வைத்தியசாலைப் பதிவேடுகளில் குறிப்பிட்ட விமானப் படை சார்ஜன்ட் - தாக்குதல் நடந்த தினத்தன்று சிகிச்சை பெற்றிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், அவர் தான் கடந்த மூன்று மாதங்களாக மகப்பேற்று சிகிச்சைக்குச் செல்லவில்லை எனத் தெரிவித்துள்ளார். தனக்கு மூன்று மாதங்களுக்கு முன்னரே குழந்தை பிறந்து விட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனால் கடந்த மூன்று மாதங்களாக மேற்படி விமானப் படை சார்ஜன்டின் பெயரில் சிகிச்சை பெற்று வந்த பெண் யார் என்ற கேள்வி எழுந்துள்ளது.

விமானப் படையின் தொண்டர் படையின் இன்னொரு பெண் சிப்பாயும் இது தொடர்பாக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் குறித்த தினத்தில் - தான் சிகிச்சைக்குச் செல்லவில்லை என்று அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.

ஆனால், அன்று கடமையிலிருந்த வைத்தியர் தான் குறிப்பிட்ட சிப்பாயைப் பரிசோதித்து அவருக்கான மருந்துச் சிட்டையை எழுதிக் கொடுத்ததாக உறுதிப்படுத்தியுள்ளார்.

இதன் பின்னர் அதிகாரிகள் குறித்த பெண்ணிடம் விசாரணை நடத்தியபோது தான் இராணுவ வைத்தியசாலையில் மகப்பேற்று சிகிச்சைக்குச் சென்றதை ஒப்புக் கொண்டுள்ளார். இவர் தான் தனிப்பட்ட காரணங்களுக்காகவே அங்கு சென்றதை மறைத்ததாகவும் அதிகாரிகளிடம் கூறியுள்ளார். எனினும், இவர் மீது தொடர்ந்தும் விசாரணை நடைபெற்றுவருவதாகவும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

# பௌத்த மத செயற்பாடுகளுக்காக ஞாயிறு கல்வி நடவடிக்கைக்கு தடை

கொழும்பு—



பௌத்த மதச் செயற்பாடுகளுக்காக ஞாயிற்றுக் கிழமைகளில் கல்வி சார் நடவடிக்கைகளுக்குத் தடை விதிப்பது குறித்து விவாதிக்கப்பட்டுவருகிறது.

கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் பேசிய ஜாதிக ஹெல உறுமயவின் உறுப்பினர் ஓமல்பே சோபித தேரர் -

ஞாயிற்றுக்கிழமை கல்விசார் நடவடிக்கைகளை மேற்கொள்வதால் பௌத்த மதச் செயற்பாடுகள் பாதிப்படைகின்றன. எனவே ஞாயிற்றுக்கிழமை சிறப்பு வகுப்புகள் மற்றும் பாடசாலைகளை இயக்குதல் ஆகியவற்றைத் தடை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார். இருப்பினும் இந்தத் தடைக்கான சாத்தியம் இல்லை என்றும் சட்டமா அதிபர் தெரிவித்தார். ஆனால் இது விவாதிக்கப்படும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# ஜனாதிபதி மஹிந்தவுடன் ஹக்கீம் கலந்துரையாடல்



கொழும்பு—

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கடந்த சனிக்கிழமை சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ளார்.

அலரி மாளிகையில் மு.ப 11.40 மணி முதல் ஒரு மணித்தியாலம் வரை இந்த சந்திப்பு நடைபெற்றது.

அமைதி முயற்சிகளில் முஸ்லிம்களின் பங்கேற்பு அவசியம் என்று இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் மற்றும் நோர்வே விசேட தூதுவர் ஹன்சன் பௌயர் ஆகியோருடனான சந்திப்புகளில் விவாதிக்கப்பட்டவை குறித்தும் ஹக்கீமிடம் மகிந்த விளக்கியுள்ளார்.

வடக்கு - கிழக்கில் முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டு வருவது குறித்தும், அரசாங்கத்தின் அமைதி முயற்சிகளுக்கு நிபந்தனையற்ற ஆதரவு தெரிவிப்பது குறித்தும் மகிந்தவுக்கு ஹக்கீம் விளக்கியதாக முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சந்திப்புக்கு முன்னதாக அதிருப்தி முஸ்லிம் காங்கிரஸ் அமைச்சர்களுக்கு சிலர் தகவல் தெரிவித்துள்ளனர். இதையடுத்து அமைச்சர் அதாவுல்லா, றிசாட் பதியுதீன் அமீர் அலி மற்றும் அன்வர் இஸ்மயீல்



ஆகியோரும் அலரி மாளிகைக்குச் சென்றனர்.

மகிந்தவின் வருகைக்காக காத்திருந்த ரவூப் ஹக்கீமுக்கு வலது புறத்தில் இவர்களும் அமர்ந்திருந்தனர். இருப்பினும் தன்னைச் சந்திக்க அவர்கள் அனுமதி பெற்றிருக்கவில்லை என்று ஹக்கீமிடம் - ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.



நாட்டின் தற்போதைய சூழ்நிலையை அடுத்து கொழும்பு துறைமுக கடற்கரைப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினரைப் படத்தில் காணலாம்.

படம் - ஏ.எவ்.பி.

# போர்ப் பயிற்சிக் கல்லூரியில் கேணல் ரமணன் நினைவு நிகழ்வு



கிளிநொச்சி —

மாவீரர் கேணல் ரமணனின் நினைவு நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை போர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்றது.

போர்ப்பயிற்சி ஆசிரியர் சுகிர்தா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை கட்டளைத் தளபதி கேணல் ரமேஸ் ஏற்றினார்.

கேணல் ரமணனின் திருவுருவப் படத்துக்கு மாலதி படையணித் தளபதிகளில் ஒருவரான உஷா ஈகைச் சுடரேற்றினார்.

மலர்மாலையை கேணல் தீபன் அணிவித்தார். லெப்.கேணல் குட்டிசிறி மோட்டார் படையணி போராளி தூயவன் மலர் வணக்க நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து, போராளிகளின் நினைவு நிகழ்வுகளும், கேணல் ரமேஸ், கேணல் தீபன் ஆகியோரின் நினைவுரைகளும் இடம்பெற்றன.

# கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவான சுகாதார தொண்டர் பெயர் விபரம்!

கிளிநொச்சி —

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவையினரால் நடத்தப்பட்ட சுகாதார தொண்டர்களுக்கான நேர்முகப் பரீட்சையில் கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவானோர் விபரம் -

கதிரவேற்பிள்ளை - சாந்தி (முழங்காவில்), ஆறுமுகம் - சாந்தி (கிளிநொச்சி), லோகசேகர் - செல்வநாயகி (கிளிநொச்சி), சரவணபவன் - ஜெயராணி (பூநகரி), மயில்வாகனம் - தயாளினி (கிளிநொச்சி), கணபதிப்பிள்ளை - கலைவாணி (பூநகரி), தேவராசா - செல்வராணி (பூநகரி), சுவேந்திரன் - யோகமலர் (கிளிநொச்சி), பாலசிங்கம் - சுயந்தினி (கிளிநொச்சி), அரியநாயகம் - லச்சுமிதேவி (வண்ணாங்குளம்), தங்கப்பாண்டி - புஸ்பமேரி (கிளிநொச்சி) , ராமதாஸ் - மகேஸ்வரி (கிளிநொச்சி), சிறிகுமரன் - சரோஜாதேவி (பளை) , கருணாகரன் - சிவரஞ்சினி (கிளிநொச்சி), எம்.கமலேஸ்வரி (கிளிநொச்சி), அங்கமுத்து - லலிதா தர்சினி (பூநகரி), பாலச்சந்திரன் - புஸ்பராணி (பளை), ராமசாமி - பத்மேஸ்வரி (பூநகரி), குகனானந்தமூர்த்தி - கலைவாணி (கிளிநொச்சி), இரத்தினம் - கலாவதி (கிளிநொச்சி), ராமசாமி - உதயா (பளை), சிவானந்தன் - தயாளினி (கிளிநொச்சி), சண்முகம் - சரோஜாதேவி (வட்டக்கச்சி), கபிரியேல் - சமித்தம்மா (கிளிநொச்சி), நாகராசா - சாந்தி (பூநகரி), சாந்தகுமார் - பிருந்தாமலர் (கண்டாவளை), சின்னத்தம்பி - சுஜாத்தா (கிளிநொச்சி), செபஸ்ரியான் - தேவரஞ்சிதம் (கிளிநொச்சி), குகதாஸ் - காரியாதேவி (கிளிநொச்சி), மகாலிங்கம் - இந்துமதி (கண்டாவளை), கே.சிவரஞ்சினி (பளை), வி.மோகனதாஸ் (கொடிகாமம், யாழ்ப்பாணம்), பிரபாகாந்தன் - பத்மகலா (கிளிநொச்சி), பரமேஸ்வரன் - வசந்தபிரியா (கிளிநொச்சி), தாமராசன் - ஜெயந்திமலர் (கிளிநொச்சி), ரவிக்குமார் - ராசமலர் (கிளிநொச்சி), சிவலிங்கம் - கமலராணி (கிளிநொச்சி), கனகரத்தினம் - குகனேஸ்வரி (பூநகரி), தர்மலிங்கம் - தேவகுமாரி (கிளிநொச்சி), நாகராசா - சத்தியபிரியா (முழங்காவில்), தியாகராசா - நாகலோஜினி (அக்கராயன்), வேலழகன் - சுபனானந்தி (அக்கராயன்), சுமித்திரன் - கோமதி (கிளிநொச்சி), ராமசாமி - ஜெயவதனா(கிளிநொச்சி), ஆறுமுகம் - புவனலோஜினி (கிளிநொச்சி), யூத்குமார் - ஜெனித்தா ( பூநகரி), பாலசிங்கம் - முகிந்தினி (முழங்காவில்), செல்லையா - மகேஸ்வரி (கிளிநொச்சி), கெனடி - மரியநாயகி (கிளிநொச்சி), பாலசிங்கம் - யமுனா (பூநகரி), சத்தியகுமார் - மேரிசித்திரா (கிளிநொச்சி), விஜயரூபன் - சிறிவதனி (கிளிநொச்சி), இராசரத்தினம் - சந்திரகுமாரி (கண்டாவளை), கணபதிப்பிள்ளை - உஷாநந்தினி (கண்டாவளை), குகதாஸன் - வாசுகி (முழங்காவில்), நடராசா - மாலினி (கிளிநொச்சி), உதயகுமார் - சித்திக்சைகிலா (கிளிநொச்சி), சிறிதரன் - விஜயராணி (கிளிநொச்சி), ரமேஸ்குமார் - விநோதினி (கிளிநொச்சி), ராஜ்குமார் - மேரியோகராணி (பூநகரி), யோகரட்ணம் - புஸ்பலதா (கண்டாவளை), ராசநாயகம் - குருபேஜினி (கண்டாவளை), வேலு - ஜெயந்தி (கிளிநொச்சி), நவரட்ணம் - ரூபவதனி (பளை), யோகேஸ்வரன் - தர்மச்செல்வி (கண்டாவளை), சஞ்சீவன் - நிர்மலா (கண்டாவளை), வசந்தராஜ் - சியாமளாதேவி (கிளிநொச்சி), பாலகுலேந்திரன் - சிவசாந்தி (தர்மபுரம்), ஜெயக்குமார் - வனிதா (தர்மபுரம்), சுபேஸ்கரன் - விஜயகுமாரி (கண்டாவளை), சூரியகாந்தராஜா - சிவாஜினி (வட்டக்கச்சி), கணேஸ் ரவீந்திரன் -மல்லிகாதேவி (தர்மபுரம்), அன்ரனி - ஜீவராணி (தர்மபுரம்), இரத்தினம் - ஜோதிமதி (உதயபுரம்).

### அமைய அடிப்படையில் தெரிவானோர் விபரம் -

வேலு - மலர்மதி, குமரேந்திரா - உதினிகுமாரி, பத்மரமேஸ் - விஜயலலிதா, கடம்பேஸ்வரன் - கோமதி, நாகேந்திரன் - சுதாமதி, நித்தியானந்தமூர்த்தி - யோகேஸ்வரி, மதிசீலன் - பரமேஸ்வரி, சுப்பிரமணியம் - யோகேஸ்வரி, கணேசலிங்கம் - விஜயசந்திரேஸ்வரி, யேசுநாயகம் - அனோட்ராகினி, கோவிந்தராஜ் - உஷாநந்தினி, சிறீஸ்கந்தராசா - ரேணுகா, பாலச்சந்திரன் - தவரூபி, ஆறுமுகம் - லலிதாதேவி, வீரமணி - சுயினா ஆகியோரே தெரிவு செய்யப்பட்டவர்களாவர். (09)

# கிளிநொச்சி பொது வைத்தியசாலை ஜூன் மாத நடுப்பகுதியில் திறப்பு!

வட்டக்கச்சி —

புதிதாக அமைக்கப்பட்டுவரும் கிளிநொச்சி பொது வைத்தியசாலை ஜூன் மாதம் கிளிநொச்சியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கு முன்னேற்பாடாக நேற்றுமுன்தினம் கிளிநொச்சி பொது வைத்தியசாலை மேம்பாட்டுப் பேரவை கூட்டம் பேரவைத் தலைவர் வைத்திய கலாநிதி இ.சதானந்தன் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கிளிநொச்சி பொது வைத்தியசாலை வளாகத் துப்புரவுப் பணிகள் மற்றும் வளாக அழகுச் செயற்பாடுகள் குறித்து கிளிநொச்சி பொது வைத்தியசாலை மேம்பாட்டுப் பேரவை அங்கத்தவர்களுடன் கலந்துரையாடப்பட்டது. (09)

# திருமலைக்குத் திரும்பிச் செல்லுமாறு மன்னார் இராணுவத் தளபதி உத்தரவு

திருகோணமலை —

திருமலையில் இருந்து இடம்பெயர்ந்து மன்னார் பேசாலையில் தங்கியுள்ளோரை உடனே திருமலைக்குத் திரும்புமாறு மன்னார் இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் டீ.யு.முனசிங்க உத்தரவிட்டுள்ளார்.

பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களிடம் கடந்த சனிக்கிழமை முனசிங்க கூறியதாவது -

உலகில் யுத்தம் இல்லாத நாடே கிடையாது. யுத்தத்தின்போது பொது மக்களும் பாதிக்கப்படுவது வழமை. இதேபோல்தான் திருமலை தமிழ் மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதற்காக நான் வருந்துகின்றேன்.

தற்போது திருமலையில் அமைதி நிலவுகிறது. வன்முறையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

நீங்கள் உடனடியாக திருமலைக்குத் திரும்புங்கள். திருமலையில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும். எனவே, அஞ்சத் தேவையில்லை.

இந்தியாவுக்குச் செல்ல வேண்டாம். இந்தியாவுக்கு சட்டவிரோதமாகச் செல்வதை அனுமதிக்க முடியாது. திருமலைக்குத் திரும்பினால் அனைத்து அடிப்படை வசதிகளையும் மனிதாபிமான அடிப்படையில் ஒழுங்கு செய்வோம் எனத் தெரிவித்தார்.

கனரக இராணுவத் தளபாடங்களுடன் பலத்த பாதுகாப்போடு இராணுவத் தளபதி பேசாலைக்குச் சென்றபோது அந்தப் பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# துரிதகதியில் நடைபெற்றுவரும் மைதான விஸ்தரிப்பு பணிகள்!

கிளிநொச்சி —

வட்டக்கச்சி மகா வித்தியாலயத்துக்குரிய மைதானத்தை விஸ்தரிப்புச் செய்வதற்கான பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கரைச்சிப் பிரதேச செயலக ஆதரவுடன் வட்டக்கச்சி மகா வித்தியாலய மாணவர்கள், அந்தப் பகுதி கிராம அலுவலர்கள் ஆகியோர் இணைந்து மைதான விஸ்தரிப்புத் திட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த மைதானத்தை விஸ்தரிப்புச் செய்வதற்கு பெருமளவான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், மைதானத்தின் புனரமைப்புப் பணிகள் குறுகிய காலத்தில் பூர்த்தியாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# சிறுவர் உரிமைகள் தொடர்பாக இராமநாதபுரத்தில் கலந்துரையாடல்

கிளிநொச்சி —

சிறுவர் பாதுகாப்பு நிதிய நிதியுதவியுடன் கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் சிறுவர் உரிமை தொடர்பான கலந்துரையாடல்கள் இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை மண்டபத்தில் கள அலுவலர் நா.யோகராசி தலைமையில் நடைபெற்றது.

கடந்த திங்கட்கிழமை பிரதேசத்தின் மூன்று பாடசாலைகளான வட்டக்கச்சி மகாவித்தியாலயம், இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை, இராமநாதபுரம் மகாவித்தியாலயம் ஆகியவற்றின் ஆசிரியர்களுக்கும் மற்றும் நிறுவனப் பணியாளர்கள், ஊரக மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கும் - மறுநாள் செவ்வாய்க்கிழமை துறைசார்ந்த அதிகாரிகளுக்கும், மருத்துவ மாதுக்கள் வைத்தியர்கள்,சுகாதார வைத்திய அதிகாரிகள், கிராம அலுவலர்கள், சிறுவர் நலத்திட்ட உத்தியோகத்தர்கள், கல்விசார் பிரதிநிதிகள் ஆகியோருக்கு 24 ஆம் திகதி புதன்கிழமை ஏழு வயது தொடக்கம் பதின்மூன்று வரையான சிறுவர்களுக்கும், 25 ஆம் திகதி வியாழக்கிழமை 13 வயது தொடக்கம் 18 வயது வரையான சிறார்களுக்கும், 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பெற்றோர்களுக்கும்,27 ஆம் திகதி சனிக்கிழமை ஆசிரியர்களுக்கும் தனித்தனியாக நடைபெற்றன.

இந்தக் கலந்துரையாடல்கள் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பெருமளவானோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (09)

# மண்ணெண்ணெய்க்கு பெரும் தட்டுப்பாடு!

கிளிநொச்சி —

கிளிநொச்சியில் எரிபொருளுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுவதால் மக்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர்.

குறிப்பாக அத்தியாவசிய தேவையாகவுள்ள மண்ணெண்ணெய்க்குப் பலத்த தட்டுப்பாடு நில்வி வருகின்றது.

வன்னிப் பகுதியில் மின்சாரம் இல்லாத காரணத்தால், மக்கள் விளக்குகளையே பயன்படுத்துகின்றனர்.

எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கும் என்ற காரணத்தால் வர்த்தகர்கள் அவற்றை வைத்துக் கொண்டு இல்லையெனக் கூறி செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி வருகின்றனர்.

இதனால் தமது அத்தியாவசிய தேவைக்கு கூட எரிபொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதாக மக்கள் கவலை தெரிவித்தனர். (கு)

# வீதியோர மீன் வியாபாரத்தால் நெருக்கடியை சந்திக்கும் மக்கள்

கிளிநொச்சி —

விசுவமடு றெட்பானா கிராமத்தில் நாளாந்தம் வீதியோரத்தில் மீன் வியாபாரம் செய்யப்படுவதால் சுகாதார சீர்கேடு நிலவுவதுடன், வீதியோரமாக மக்கள் பயணம் செய்ய முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

றெட்பானா கிராமத்தில் பொதுச் சந்தை ஒன்று இல்லாத நிலையால் மீன் வியாபாரிகள் பிரதான வீதியோரமாக மீன் வியாபாரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் பிரதான வீதியால் செல்லும் வாகனங்களின் புகை, புழுதி என்பன மீன்களின் மேல் படிகின்றன.

அத்துடன், மீன் வாங்குவதற்கென மக்கள் வீதியோரமாக கூடி நிற்பதால் வீதிப் போக்குவரத்துக்கும் பல்வேறு இடையூறுகள் ஏற்படுகின்றன.

இது குறித்து சம்பந்தப்பட்டவர்களிடம் இந்தப் பகுதி பொது அமைப்பினர் தெரிவித்த போதிலும், இது வரை எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என அவர்கள் விசனம் தெரிவித்தனர். (கு,09)

# சிரமதானம்

மல்லாவி —

மல்லாவி - ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் மல்லாவி மத்திய கல்லூரி மாணவிகள் நேற்றுமுன்தினம் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை சிரமதானப்பணியை மேற்கொண்டனர். (09)

# நிதி வழங்கப்படாமையாலேயே அபிவிருத்திப் பணிகள் பாதிப்பு!

கிளிநொச்சி —

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு அபிவிருத்திப் பணிகளும் உரிய காலத்தில் தொண்டு நிறுவனங்கள் நிதி உதவியை வழங்காத காரணத்தால் வேலைகள் எவையும் பூர்த்தி செய்யப்படாமலுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலகம் மூலம் திட்டங்கள் தீட்டப்பட்டு, இந்தத் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட பல்வேறு அபிவிருத்தி கட்டடப்பணிகள் இந்த நிதி ஒதுக்கப்படாமையால் நிறைவடையாமலுள்ளது.

இதனால் விவசாயம், மருத்துவ சேவை மற்றும் கல்வி ஆகிய துறைகளுக்கான அபிவிருத்திப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. கிளிநொச்சி அழகியல் கலாமன்றம், பிரதி மாகாண சுகாதாரப் பணிமனை ஆகியவற்றுக்கான நிரந்தர கட்டடப் பணிகளுக்கு தொண்டு நிறுவனங்களால் உரிய காலத்தில் நிதி முழுமையாக வழங்கப்படாததாலேயே கட்டடப் பணிகள் நிறைவுபெறவில்லை.

இது தொடர்பாக அரச அதிபரிடம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முறைப்பாடு செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# மூத்த ஊடகவியலாளர் காலமானார்

மட்டக்களப்பு

கிழக்கிலங்கையின் மூத்த ஊடக வியலாளர் வீ.சு.கதிர்காமத்தம்பி (வயது 65) நேற்றுக் காலமானார்.

1960 ஆம் ஆண்டு தொடக்கம் 1980 ஆம் ஆண்டு வரை வீரகேசரி பத்திரிகையின் மட்டக்களப்பு செய்தியாளராகப் பணியாற்றி பிரபலமான இவர் - மட்டக்களப்பிலிருந்து வெளியான கொண்டல், விடிவானம், தினக்கதிர் நாளிதழ்களின் பிரதம ஆசிரியராகவும் பணியாற்றினார்.

தந்தை செல்வாவின் அஹிம்சைப் போராட்டங்கள் பலவற்றில் பங்கு கொண்ட அமரர். கதிர்காமத்தம்பி மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் பத்திரிகையாளர்கள் பலரை உருவாக்கிய பெருமைக்குரியவராவார்.

கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் உருவாக்கத்தில் பெரும் பங்கு கொண்ட இவர் - வாகரை கதிரவெளியைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு கல்லடியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்தார்.

அன்னாரது இழப்பு கிழக்கிலங்கை ஊடகவியலாளர்களுக்குப் பேரிழப்பானதெனவும், அவர் ஊடகவியலாளர்கள் பலருக்கு ஊக்குவிப்பாளராகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்தாரெனவும் இலங்கை தமிழ் ஊடகவியளாளர் ஒன்றியத்தின் பிரதித்தலைவர் ஏ.எவ்.எம் சலீம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார். (07)

# விடுமுறை கால வகுப்புகள்

யாழ்ப்பாணம்

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான விடுமுறை கால வகுப்புகள் நடைபெற்று வருவதாகப் பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

ஏனைய தரங்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான விடுமுறை கால வகுப்புகள் நடைபெறமாட்டாதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மீனவர்களின் நெருக்கடிகளை தீர்க்குமாறு வேண்டுகோள் !

யாழ்ப்பாணம்

வடமராட்சி கடற்தொழிலாளர்கள் தொழில் செய்வதற்குக் கடற்படையினரால் ஏற்படுத்தப்பட்ட தொழிற்தடை மற்றும் எரிபொருள் பெறமுடியாத நிலை தொடர்பாக யாழ்.மாவட்ட அரச அதிபரிடம் முறைப்பாடு செய்யவுள்ளதாக வடமராட்சி கடற்தொழிலாளர் சமாசம் தெரிவித்துள்ளது.

வடமராட்சியைச் சேர்ந்த கடற்தொழிலாளர்கள் பருத்தித்துறை கடற்பரப்பில் 3 கிலோ மீற்றருக்குட்பட்ட பகுதிக்குள் தொழில் செய்வதற்குக் கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இந்தப் பகுதிக்குள் தொழில் செய்வதால் போதியளவு வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதேவேளை தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகக் கடற்படையினரால் தொழில் செய்ய அனுமதி வழங்கப்பட்ட 3 கிலோ மீற்றர் பிரதேசத்திலும் கடற்தொழில் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மீனவக் குடும்பங்கள் தெரிவித்தன. இதனால் மீனவக் குடும்பங்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வினைப் பெற்றுத் தரும்படி யாழ். மாவட்ட அரச அதிபரிடம் கோரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொழிலாளர்களுக்கு ஒருநாளைக்கு தொழில் செய்வதற்கு 15 லீற்றர் எரிபொருள் தேவைப்படுகின்றபோதும் குறைந்தது 10 லீற்றர் எரிபொருளை பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யும் படியும், 3 கிலோ மீற்றர் பிரதேசத்துக்கு அப்பால் சென்றும் தொழில் செய்வதற்கு கடற்படையினரிடம் அனுமதி பெற்றுத் தரும்படியும் முறையீடு செய்துள்ளதாக கடற்தொழில் சமாசம் தெரிவித்துள்ளது.

# வன்செயல்களால் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீட்டுத் தொகை

யாழ்ப்பாணம்

கடந்த காலங்களில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களின்போது இறந்தவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படுகிற இழப்பீட்டுத் தொகையை இதுவரை பெற்றுக்கொள்ளாத வலி. மேற்குப் பிரதேச சபைக்குட்பட்டவர்களை உடன் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் கேட்டுள்ளார்.

கணபதி சின்னத்தம்பி (ஜே/174 சுழிபுரம் கிழக்கு), முருகேசு கோணேஸ்வரன் (ஜே/164 அராலி வடக்கு), தங்கராசா உலகநாயகி (ஜே/169 தொல்புரம் மேற்கு), மாணிக்கம் சிவராசா (ஜே/169 தொல்புரம் மேற்கு), இளையதம்பி கந்தசாமி (ஜே/161 அராலி மேற்கு).

கந்தன் வைரவன் (ஜே/169 தொல்புரம் மேற்கு), தங்கவேல் தவமணிதேவி (ஜே/174 சுழிபுரம் மத்தி), செல்லையா கிருஸ்ணபிள்ளை (ஜே/171 பொன்னாலை), முருகன் தவராசா (ஜே/174 சுழிபுரம் கிழக்கு ), கனகரத்தினம் கிருபாகரன் (ஜே/169 தொல்புரம் மேற்கு.

ஆகியோர் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலாளர் கேட்டுள்ளார்.

# கணக்காளர்கள் இடமாற்றம்

யாழ்ப்பாணம்

யாழ். மாவட்டத்தில் இரண்டு கணக்காளர்கள் கடந்த 23 ஆம் திகதி முதல் உள்ளக இடமாற்றம் பெற்றுள்ளனர்.

ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் கணக்காளராகக் கடமையாற்றிய செ.கிருபாகரன் - கரவெட்டி பிரதேச செயலகத்துக்கு, மாநகர சபையிலிருந்து மாவட்டச் செயலகத்துக்கு மாற்றம் பெற்ற என். இராஜநாயகம் ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்துக்கும் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையிலிருந்து யாழ். மாநகர சபைக்கு எஸ். கமலரூபனும் கரவெட்டியில் கடமையாற்றிய கே.கமலேஸ்வரன் வேறுமாவட்டத்துக்கும் ஏற்கனவே இடமாற்றம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (110)


# டொக்டர் யமுனாநந்தாவின் காசநோய் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்

டொக்டர். ஜமுனானந்தாவின் காசநோய் சம்பந்தமான தமிழ் விளக்க நூல் வெளியீட்டு விழா - நேற்றுகாலை 10.00 மணிக்கு நாவலர் கலையரங்கில் இடம்பெற்றது.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக - மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கேதீஸ்வரனும், சீ.வீ.கே. சிவஞானமும் கலந்துகொண்டனர். நிகழ்வில் மங்கள விளக்கை - மாநகர ஆணையாளர் ஏற்றி வைத்தார். பிரமுகர்களின் உரைகளைத் தொடர்ந்து நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. நூலின் முதற்பிரதியை மாநகர ஆணையாளர் சீ.வீ.கே சிவஞானம் பெற்றுக்கொண்டார்.

நிகழ்வில் வைத்திய கலாநிதிகள், பிரமுகர்கள், மருத்துவம் சார்ந்தவர்கள் மற்றும் ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம்

வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்பாள் ஆலய அஷ்டோத்திர சங்கர சங்காபிஷேகம் இன்று நடைபெறவுள்ளது.

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ க.ஸ்ரீரங்கநாதக் குருக்கள் தலைமையில் சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

# அலங்கார அபிஷேகம்

யாழ்ப்பாணம்

கந்தரோடை தம்மனை அருள் மிகு நாவலடி ஞானவைரவர் தேவஸ்தான அலங்கார அபிஷேகம் நாளை ஆரம்பமாகவுள்ளளது.

இந்த அலங்கார அபிஷேகம் தொடர்ந்து 10 நாட்கள் வரை நடைபெற்று அபிஷேக ஆராதனைகள் வைகாசிவிசாகத்துடன் நிறைவடையும்.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : ஜெ.சுஜெந்தா
முகவரி : நாவாந்துறை.

அகவை மூன்று



பெயர் : கோ.சாருஜா
முகவரி : புத்தூர்.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு :

பெற்றோர் ஒப்பம்

# புத்தூரில் இராணுவச் சோதனை

யாழ்ப்பாணம்

பருத்தித்துறை வீதியில் புத்தூர் சந்தியில் நேற்று முன்தினம் காலை முதல் மாலை வரை அனைத்து வாகனங்களும் கடும் சோதனைக்குள்ளாக்கப்பட்டன.

வாகனங்களை வழி மறித்துச் சோதனை செய்த படையினர் அதில் பயணம் செய்தவர்களை தீவிர சோதனைக்கு உட்படுத்தி, அடையாள அட்டை காட்டிய பின்னரே தொடர்ந்து போக்குவரத்துச் செய்வதற்கு அனுமதித்தனர்.

இதேவேளை, அடையாள அட்டை இல்லாத இரண்டு வயோதிபர்கள் நீண்டநேரமாகத் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர்.

அவர்கள் பயணம் செய்த வாகனம் பயணிக்க அனுமதிக்கப்பட்ட போதும், அந்த வயோதிபர்கள் இருவரையும் அதில் பயணம் செய்ய அனுமதிக்க வில்லை எனவும் நீண்ட நேரத்துக்குப் பின்னரே வேறு ஒரு பஸ்ஸில் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

திடீர் திடீரென படையினர் புத்தூர் சந்தியில் வாகனங்களை வழிமறித்து சோதனை செய்யப்படுகின்றனர். பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணம் செய்யும் பயணிகள் வல் வெட்டித்துறையிலும் இறக்கித் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படுவதால் உரிய நேரத்துக்கு போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் கவலை தெரிவித்தனர்.

இதேவேளை கார், ஹயேஸ், மோட்டார் சைக்கிள் போன்றவற்றில் பய ணம் செய்கின்றவர்களும் வாகனங்களின் ஒவ்வொரு பாகங்களும் கழற்றப்பட்டு சோதனை செய்த பின்னரே தொடர்ந்து போக்குவரத்துச் செய்ய அனுமதிக்கப்படுகிறனர்.

திருமணம் ஒன்றுக்குச் சென்றவர்களும் நீண்ட நேரமாக மறித்து வைத்து சோதனை செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (110)

# ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

யாழ்ப்பாணம்

தீவகம் வடக்கு - ஊர்காவற்துறைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று காலை 10 மணிக்கு உதவி அரச அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பிரதேசங்களின் அபிவிருத்தித் திட்டம் தொடர்பான பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மக்களின் ஒத்துழைப்பு இன்மையால் மிதிவெடி அகற்றுவதில் பெரும் சிரமம்

## நிறுவனங்கள் விசனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்

யாழ்.குடாநாட்டில் மிதிவெடிகள் அகற்றும் செயற்பாட்டுக்கு பொது மக்கள் தமது ஒத்துழைப்பைப் பூரணமாக வழங்குவதில்லையென மிதிவெடிகளை அகற்றி வரும் நிறுவனங்கள் விசனம் தெரிவித்துள்ளன.

குறிப்பாக அளவெட்டிப் பகுதியில் மிதிவெடிகள் புதைக்கப்பட்ட பகுதி கள் என அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் - தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணியொன்றும் அமைந் துள்ளது.

இந்தக் காணியிலிருந்து மிதிவெடி அகற்ற வேண்டாமெனக் காணி உரிமையாளர் மிதிவெடி அகற்றும் நிறுவனத்துக்கு அறிவித்துள்ளார். எனினும், மிதிவெடி அகற்றும் பணியாளர்கள் அந்தப் பகுதியில் மிதிவெடிகள் உள்ளன என எச்சரிக்கை செய்த போதிலும், உரிமையாளர் தனது காணிக்குள் மிதிவெடி அகற்றுவதை நிராகரித்துள்ளார்.

இந்த நிலையில் கடந்த 13 ஆம் திகதி காணி உரிமையாளர் கூலி வேலை செய்யும் ஒருவரை வைத்து மிதிவெடி அகற்றும் முயற்சியில் ஈடுபட்டபோது, மிதிவெடி வெடித்து கூலியாள் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் இடம்பெற்று இரண்டு தினங்களின் பின்னர் குறித்த காணி உரிமையாளரும் மிதிவெடியில் தனது காலை இழக்க வேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டார்.

இவ்வாறு பொதுமக்களின் செயற்பாடுகளால் மிதிவெடியகற்றும் நிறுவனங்களுக்கே அவப்பெயர் ஏற்படுவதாகவும், எனவே தமது செயற்பாடுகளுக்கு பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பை நல்க வேண்டுமெனவும் மிதிவெடி அகற்றும் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

புலிகளின் குரல் வானொலியின் 'அரசியல் அரங்கம்' நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் நிகழ்த்திய உரை



# தமிழ் மக்களின் அழிவுகளுக்கு சர்வதேசமே பொறுப்பேற்க வேண்டும்

'உலகம் எப்போதும் ஒரு இலக்கு நோக்கி நகருகிறது. அந்த இலங்கை அடைவதற்கு அடிப்படை முரண்கள் காரணமாக இருக்கின்றன. ஒவ்வொன்றிலும் ஒத்திருக்கும் எதிர்த் தன்மைகள் ஒன்றிணைந்து ஒரு புதிய நிலையை எடுக்கும்' என்பார் கார்ல் மார்க்ஸ்.

இதை அவர் சுருக்கமாக 'எதிர்மறையின் எதிர்மறை' என்பார்.

'அதாவது ஒரு மரம் இருக்கிறது. அதனுள் ஒரு விதை இருக்கிறது. அந்த விதையிலிருந்து மற்றொரு புதிய மரம் உருவாகிறது. இந்தப் புதிய மரமானது விதை வெடித்துச் சிதறி உருவாகிறது. இதைத்தான் கார்ல் மார்க்ஸ் எதிர்மறையின் எதிர்மறை என்பார்.

தமிழ் மக்களிடம் ஒரு அடிமைக் கருத்தாக்கம் இருந்தது.

அதன் பின்னர்.



புலிகளின் விடுதலைக் கருத்தாக்கத்தால் அது முரண்பட்டு இன்னொரு நிலைக்குச் சென்றது.

அதன் பின்னர் இன்று அந்தக் கருத் தாக்கம் புத்தாக்கம் பெற்று உலகளாவிப் பரந்து நிற்கிறது.

இதுவே எதிர் மறையின் எதிர்மறை என்பார்கள். இது ஒரு 'இயங்கியல்' இந்த இயங்கியல் கோட்பாட்டை உலகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

ஆனால், சிங்களத்திலோ இந்த எதிர் மறையின் எதிர்மறை என்பது இன்னொரு எதிர்மறையாக உருவெடுத்து 'இயங்கியல் மறுப்பியலாக' உருவெடுத்து நிற்கிறது.

1948 ஆம் ஆண்டு முதல் இனச் சிக்கலில் மூன்றாம் தரப்பினரது தலையீட்டை முற்று முழுதாக சிங்களம் எதிர்த்து வந்துள்ளது.

நடுவர் தலையீட்டை தமிழர் தரப்பு கோரிய போதெல்லாம் முழுமையாக எதிர்த்த சிங்களம்.

ஒரு நிலையில் இந்தியத் தலையீட்டுக்குத் தானே கோரியதும், சந்திரிகா காலத்தில் சர்வதேசத் தலையீடாக நோர்வேயை வரவழைத்ததும் இதற்கு அப்பால் -

இன்றைக்கு ஐக்கிய நாடுகள் சபையினது படைகள் இங்கே வரும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு தலைவர் கூறுவது மான விந்தை தான் இன்று நடைபெறுகிறது.

தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை திடீரெனச் சந்தித்த சர்வமதத் தலைவர்களிடம் 'நான் நேரடியாகப் புலிகளுடன் பேசத் தயாராக இருக்கிறேன்' என்று மகிந்த ராஜபக்ஷ ஒரு செய்தியைச் சொல்லி அனுப்பியிருக்கிறார்.

மேலும் - இலங்கையில் ஒரு புது மாதிரியான தீர்வை - ஒற்றையாட்சியின் கீழ் வைக்கலாம் என்றும், ஒற்றையாட்சியின் கீழான எந்தத் தீர்வுக்கும் தான் தயார் என்றும் மகிந்த சொல்லி அனுப்பியிருக்கிறார்.

ஐ.நா. அமைதிப் படை தொடர்பான ஐக்கிய தேசியக் கட்சியின் கருத்தை மறுத்திருக்கும் அமைச்சர் டி.யூ. குணசேகர.

'இனப்பிரச்சினையை சிலர் ஐ.நா. வரை கொண்டு செல்ல முற்படுகின்றனர். இனப் பிரச்சினை இப்போது சர்வதேசத்திடம் கொண்டு செல்லப்பட்டுள்ளது. ஆனால், இனப் பிரச்சினையை சர்வதேச மயப்படுத்த எமது அரசாங்கம் ஒரு போதும் அனுமதிக்காது. ஐ.நா. வரை கொண்டு செல்ல மேற்கொண்ட முயற்சி தவறு. ஐ.நா தலையிட்டால் நாம் பாரிய விளைவுகளைச் சந்திக்க நேரிடும்' என்று கூறியுள்ளார்.

அத்துடன் 'இனப்பிரச்சினையை நாம் அரசியல் ரீதியாகத் தீர்க்க வேண்டும்' என்றும் மனம் தவறி ஒரு உண்மையைத் தெரிவித்துள்ளார்.

1956 ஆம் ஆண்டு நேரடிப் பேச்சுக்களில் எந்தத் தீர்வையும் வைக்காத சிங்களம்.

1983 ஆம் ஆண்டு இனப் படுகொலைக்குப் பின்னர் இந்தியா தலையிட்ட போது அதை முடிந்தளவுக்கு ஒதுக்கிப் புறம் தள்ளிய சிங்களம் - 1987 ஆம் ஆண்டு இந்தியாவையே மீண்டும் வரவழைத்த சிங்களம், தமிழீழம் என்பது அமெரிக்காவின் சதி என்று கூறிய சிங்களம்,

2000 ஆம் ஆண்டளவில் நோர்வையை தலையிடவைத்த சிங்களம், இப்போது ஐ.நா. வரை கொண்டு செல்ல கோரிக்கை வைக்கிற சிங்களம். ஐ.நா. தலையீட்டை எதிர்க்கிற சிங்களம் என்று அடிப் படையி லேயே முரண்பட்டு பகுத்தறிவற்று செயற்படுகிற சிங்களத் தின் மனமானது பூனைக்கும், மனிதனுக்கும், பலருக்குமாக அச்சப்பட்டு அச்சப்பட்டு உருவங்களை மாற்றிக் கொண்ட ஒரு சுண்டெலியின் மனதை ஒத்தது.

அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் அண்ணையினது போரும், சமாதானமும் நூலில் ஒரு பக்கத்தை நினைவூட்டுகிறேன்.

'1983 ஆம் ஆண்டு ஜூலை 24 ஆம் திகதி தமிழருக்கு எதிரான இனக்கலவரம் தலை தூக்கிய அன்றே இந்திரா காந்தியின் அரசியல் இராஜதந்திர முயற்சிகள் தொடங்கின. தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் கோரத் தாண்டவமாடிய போது நிலைமையை உணர்ந்த இந்திரா உடனடியாக ஜெயவர்த்தனவைத் தொடர்பு கொண்டு தனது அதிருப்தியை வெளியிட்டார். அவரது அறிவுறுத்தலின் பேரில் இந்திய வெளியுறவு அமைச்சு ஒரு கண்டன அறிக்கையை வெளியிட்டது. தனது கொல்லைப்புறத்தில் இந்தக் கொடுமைகள் நீடித்தால் இந்தியாவால் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது என்றும் எச்சரித்தது' என்றார்.

இப்படியாகத்தான் நரசிம்மராவ் மற்றும் மூத்த இராஜதந்திரியான ஜி.பார்த்தசாரதி ஆகியோர் அனுப்பி வைக்கப்பட்டதும், தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட்டதும் நாம் அறிந்தது தான். இந்தத் திட்டத்தை முற்றிலுமாக புறந் தள்ளி இந்திரா காந்தியை மிகக் கேவலமாக எதிர்த்தார் ஜே.ஆர். அதே போல்.

1987 ஆம் ஆண்டு மிக மோசமாக இந்திய இலங்கை ஒப்பந்தத்தை ஜே.வி.பி எதிர்த்தது.

இந்தியா - இலங்கை ஒப்பந்தம் ஒரு ஏகாதிபத்திய சதி என்றும் தமிழ் மக்கள் அனைவருமே இந்தியாவின் கூலிகள், ஏஜெண்டுகள் என்றும் விமர்சனம் செய் த ஜே.வி. பி - அண்மைக் காலமாக இவர்கள் இந்தியத் தலையீட்டை இரந்து கெஞ்சி மன்றாடி வருகின்றனர்.

தமிழ் மக்கள் வைத்த கோரிக்கைகளைப் புறந்தள்ளிய் சிங்களம் - தமிழ் மக்களை அழிப்பதற்காக தமிழ் மக்கள் வைத்த கோரிக்கைகளைத் தாங்களே வைக்கின்ற விந்தையை என்ன என்று அழைப்பது?

பிராந்திய நிலையில் இந்தியத் தலையீட்டை நிராகரித்தவர்கள் பின்னர் அதை ஏற்றுக் கொண்டனர்.

சர்வதேசத்தினது தலையீட்டை முற்றாக நிராகரித்த சிங்களம் பின்னர் தாங்களே அதை சர்வதேசத்துக்குக் கொண்டு சென்றனர்.

1998 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் சிறுநீரகக் கோளாறினால் அவதிப்பட்ட அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்க மறுத்தது சிங்களம். தேசியத் தலைவரினது முயற்சியால் வெளிநாடு சென்று பாலா சிகிச்சை பெற்றார்.

அதன் பின்னால் -

அவரைத் தொடர்பு கொள்ள நோர்வே சமாதானக் குழுக்களை அனுப்பினர்.

லண்டனில் உள்ள பாலா இல்லத்துக்கு எரிக் சொல்ஹெய்ம் போன்றவர்கள் அடிக்கடி சென்று தங்கள் தலையீட்டுக்கான சம்மதம் பெற முயற்சித்தமையும் அப்போதெல்லாம் அதற்கு சந்திரிகா இணங்கியதாகக் கூறியிருப்பதும் வரலாற்றில் பதியப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள்.

2000 ஆம் ஆண்டு ஒக்ரேபர் 31 ஆம் திகதி வன்னியிலுள்ள மல்லாவியில் தலைவருக்கும், நோர்வே சமாதானக் குழுவினருக்கும் இடையே சந்திப்பு நடந்தது. இந்தச் சந்திப்பினது நேரடி விளைவுதான் இன்றளவும் நோர்வேயின் சமாதான முயற்சி நீடிக்கிறது.

நோர்வேயை வரவழைத்த அதே சிங்களம் நோர்வேக்கு எதிராகக் குரல் எழுப்புகிறது.

இப்போது நோர்வேயைத் தவிர்த்து ஐ.நா பற்றி பேசுகின்ற போதும் முன்னைய கருத்துகளே மீண்டும் வருகின்றன.

இனப்பிரச்சி னையாது சர்வதேச மயமாக்கப்பட்டு விட்ட நிலை யில் அதை உணராமல் இனப்பிரச்சினையை சர்வதேச மயப் படுத்த ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம் என்று கூறுகிற இவர்கள் யதார்த்தத்தை மறுக்கக் கூடிய 'இயங்கியல் மறுப்பியல்' என்ற கோட்பாட்டுக்குள் செல்கின்றனர்.

இதனை மேலும் விளக்க ஜே.வி.பியினது கொள்கை விளக்கப் பிரகடனத்தைப் பார்க்கலாம்.

ஜே.வி.பி யின் மறைந்த தலைவர் றோகண விஜயவீர வின் தமிழர் பிரச்சினைக் குத் தீர்வு என்ன என்ற 315 பக்க நூலில் அவர் சில கருத்துக்களை முன்வைக்கிறார்.



இனப்பிரச் சினையானது ஏகாதிபத்தியத்தின் சதி - சர்வதேச முதலாளித்துவத்தின் விளைவு - இவற்றுக்கு புலிகள் அல்லது தமிழ் மக்கள் துணை போகின்ற கூலிகள். என்று கூறி இனப் பிரச்சினையை எதிர்த்தவர் றோகண விஜயவீர. அமெரிக்காவின் உளவு அமைப்பான சி.ஐ.ஏ குறித்தும் எதிர்க்கருத்துக்களைக் கூறியுள்ளார்.

ஆனால், அதே சிங்களம் இன்றைக்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் ஆதரவைக் கேட்டு ஓடுகிறார்கள்.

இப்படித் தலையிடக் கோரிக்கை விடுக்கின்ற போது 'இந்தத் தலையீடு எத்தகைய எதிர்விளைவை உருவாக்கும்' என்பதை மறந்து பேசுவது அதிசய மாக இருக்கிறது.

ஐரோப்பிய ஒன்றியத் தடை முயற்சியைத் தொடர்ந்து உலக நாடுகள் முழுவதும் பயணம் செய்து அனைத்து நாடுகளிலும் தடை செய்யக் கோரும் நிலையை உருவாக்கி வருகிறார்.

மங்கள சமரவீர சர்வதேசத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிற நிலையில் உள்நாட்டிலோ அன்னியத் தலையீடு வேண்டாம். நேரடியாகப் பேசுவோம். ஒற்றையாட்சியின் கீழ் தீர்வு என்று பழைய வறட்டுத்தனத்தை மக்கள் முன் வைக்கின்றனர்.

சிங்களத்தின் இந்தப் போக்கானது 'எதிர்மறையின் எதிர்மறை' என்பதற்கு அப்பால் செல்கிற மற்றொரு எதிர்மறையாகிறது.

வரலாற்றில் இயங்கியல் ரீதியாக முற்றிலுமாகவே மறுக்கப்பட்டு விட்ட ஒரு நிலைக்கு சிங்களம் சென்று கொண்டிருக்கிறது.

இதை உலகம் அறியாமல் இந்தக் கோரிக்கைகளுக்கு உலகம் இணங்கியிருப்பதன் மூலம் புலிகளைத் தனிமைப்படுத்தி மக்களைப் படுகொலை செய்ய இலங்கை அரசுக்கு கால அவகாசத்தை வழங்க உலகம் முற்படுவதை தமிழீழ விடுதலைப் புலிகள் மிக அவதான மாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

சுதுமலையில் தேசியத் தலைவர் 'தமிழ் மக்களினது பாதுகாப்புக்கு இந்தியா பொறுப்பேற்க வேண்டும்' என்று கூறியது போல இன்னொரு பிரகடனத்தை வெளியிடாத நிலையிலும்

'இன்றைய நிகழ்வுகளுக்குப் பின்னால் நடக்க கூடிய தமிழ் மக்களினது அத்தனை அழிவுகளுக்கும் சர்வதேசம் பொறுப்பேற்க வேண்டும்' என்று தெளிவாகச் சொல்லுகின்றோம்.

சர்வதேசத்தின் மனச்சாட்சியானது ஒரு கழி விரக்க நிலைக்குத் தள்ளப்படப் போகிறது என்பதை முன்கூட்டியே நாம் தெரிவித்து விடுகிறோம்.

சர்வதேசத்தை நம்பி நாங்கள் வாழாமல் எங்களது வெற்றிக்கான ஒரு துணைக் காரணியாக சர்வதேசத்தைச் சேர்த்துக் கொண்டிருப்பதால் எங்களுடைய தாயகத்தின் செயற் பாடுகளுக்கான அத்தனை வலிமையை யும் பெற்றுக் கொள்ள முயற் சிப்பதால் இதை மக்களுக்குத் தெரிவிக்கிறோம்.

இந்தியத் தலையீட்டை மறுத்தவர்கள் இந்தியத் தலையீட்டை வரவேற்றார்கள். சர்வதேசத் தலையீட்டை மறுத்தவர்கள் சர்வதேசத் தலையீட்டை வரவேற்றார்கள். இப்போது இவர்கள் ஐ.நா.வுக்கும் செல்வார்கள். ஏனென்றால் சிங்களத்துக்கு எதுவும் செய்யத் தெரியாது.

தமிழ் மக்களினது கோரிக்கைகளை மழுங்கடிப்பதற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதற்கும் மட்டுமே இந்த உலகம் உதவும் என்று நினைக்கிறது.

எத்தகைய தலையீடு என்பதையும் எங்களது செய்திகளைச் சொல்லுகிற வாய்ப்பாகவும் மறக்கப்பட்ட மக்களினது குரலை வெளிப்படுத்துகிற வாய்ப்பாகவும் நாம் பயன்படுத்திக் கொள்வோம்.

ஆனாலும் சிங்களமோ! தமிழ் மக்களுக்கு எதிராகவே சொல்லிச் சொல்லி முழுமையாக தனது அடிப்படையான, ஆதாரமான கருத்தை இழந்து அம்மணமாக நிற்கிறது.

இதை உலகம் அறியாமல் உள்ள நிலையில் எமது நிலத்தில் எமது சொந்த பலத்தில் எமதுவாழ்வை அமைத்துக் கொள்வோம்.

என்ற செய்தியை நாம் சொல்லுகிறோம் என்றார் அவர்.

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!
கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு
- திருக்குறள்.

## நமது நோக்கு

# பாதிப்பு யாருக்கு?

தமிழ் மக்கள் மீது மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் போர்க்கெடுபிடிகளை ஒவ்வொன்றாகப் பிரயோகிக்கத் தொடங்கிவிட்டது.

இராணுவக் கெடுபிடிகள், படுகொலைகள், உயிர் வாழ்வுக்கே அச்சுறுத்தலான சூழல் என்று போருக்குள் தள்ளிக் கொண்டிருக்கிறது அரசு. இதன் இறுதிக் கட்டமாக - கட்டடப் பொருட்களுக்கான தடைகளையும் விதித்திருக்கிறது.

சீமெந்து, இரும்புக் கம்பிகளுக்கு விதிக்கப்பட்டிருக்கும் தடை மீளவும் 2002இற்கு முற்பட்ட யுகத்துக்குள் தமிழர் தாயகப் பகுதிகளைக் கொண்டு செல்வதற்கான முயற்சி என்றே சொல்ல வேண்டும்.

போர்நிறுத்த உடன்பாட்டை முறையாகக் கடைப்பிடிப்பது போலவும் - போரை வெறுப்பது போலவும் காட்டிக் கொண்டு பிரசார யுத்தம் நடத்தும் அரசு -

தமிழர் பகுதிகள் மீது பொருளாதாரத் தடைகளை விதிப்பது ஏன்? ஒரு மென்தீவிர யுத்தம் நடந்து கொண்டிருப்பதாக கூறப்படுவதை மறுக்கும் அரசு - எதற்காக இப்போது பொருளாதாரத் தடைகளை விதிக்கிறது என்ற கேள்வி எழுகிறது.

இந்த அரசு போர் நடப்பதாகக் கூறுவதையோ அல்லது போருக்குள் நாடு செல்வதான கருத்தையோ சர்வதேச அரங்கின் முன் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

அதேவேளை, போரை தமிழ்மக்கள் மீது திணித்து அவர்கள்மீது அனைத்துவிதமான கெடுபிடிகளையும் மேற்கொண்டு வருகிறது.

போர்நிறுத்த உடன்பாட்டுக்கு முரணாக தாக்குதல்களில் ஈடுபடுவது மட்டுமன்றி இப்போது பொருளாதாரத் தடைகளையும் விதித்து வருகிறது.

மெல்ல மெல்ல தமிழ் மக்கள் மீது பொருளாதாரத் தடைகளை விதித்துவரும் அரசு-அடுத்த கட்டமாக முழுஅளவிலான போரைத் தொடருவதுதான் மிச்சமாக இருக்கிறது.

ஏ9 வீதியையும் கூட அரசு அவ்வப்போது மூடி வைத்து வேடிக்கை பார்க்கத் தொடங்கியிருக்கிறது. தமிழ் மக்களை எந்தெந்த வழிகளில் கஷ்டப்படுத்த முடியுமோ அந்தந்த வழிகளில் எல்லாம் நெருக்கடி கொடுத்து வருகிறது இந்த அரசு.

போர்க்கெடுபிடிகள், பொருளாதாரத் தடை என்று தமிழ்மக்கள் மீது திணித்துவரும் அரசு- இவற்றின் மூலம் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்கிவிடமுடியாது என்று உணர வேண்டும்.

1984இல் கடல்வலயத் தடைச்சட்டம், 1986இல் பொருளாதாரத்தடை, மீண்டும் 1990இல் பொருளாதாரத்தடை என்று மாறிமாறி வந்த அரசுகள் விதித்த தடைகள் எல்லாமே தமிழரின் போராட்டத்தை வளர்த்தனவே தவிர வீழ்த்தவில்லை.

ஏதோ சீமெந்தும், இரும்புக் கம்பியும், மண்ணெண்ணையும் தான் சண்டையிடும் என நினைப்பதற்கு அரச படைகள் அவ்வளவு முட்டாள்கள் என்று கூறமுடியாது.

ஆயினும், அப்படிச் செய்கிறார்கள் என்றால் அதன் பின்னணி - தமிழ் மக்களைப் பொருளாதார நிலையில் சிதைத்து, அவர்களை நாசப்படுத்திப் பணிய வைக்கவேண்டும் என்பதே.


ஆனால், ஒருபோதும் இத்தகைய தடைகள் உலகின் எந்தவொரு போராட்டத்தையும் வீழ்த்தியதாக வரலாறு இல்லை. அதை மகிந்த அரசும் புரிந்து கொள்ளவேண்டும்.

அரசு நவீன யுகத்தில் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான அணுகுமுறைகள் எத்தனையோ இருக்கும் போது - வரட்டுச் சிந்தனையுடன் மகிந்த அரசு இருண்ட யுகத்துக்குள் நாட்டைக் கொண்டு செல்கிறது.

இந்தப் பொருளாதாரத் தடை தமிழ் மக்களை மட்டும் பாதிக்காது, சிங்கள மக்களையும் இருண்ட யுகத்துக்குள் தள்ளும் என்பதை மகிந்தவின் சிந்தனையாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்



# இனப்பிரச்சினை ஐ.நா வரை சென்றால் பாரிய விளைவை எதிர்கொள்ளநேரிடும்

## அமைச்சர் டியூ. குணசேகர தெரிவிப்பு



கொழும்பு —

இனப்பிரச்சினை ஐ.நா வரை சென்றால் பாரிய விளைவை எதிர்நோக்க வேண்டியேற்படுமென அரசியலமைப்பு விவகார அமைச்சர் டியூ. குணசேகர தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

இனப்பிரச்சினை தற்போது சர்வதேச நாடுகள் மத்தியில் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. ஆனால், இனப்பிரச்சினையை சர்வதேச மயப்படுத்த அரசாங்கம் ஒருபோதும் அனுமதிக்காது. இனப்பிரச்சினையை சிலர் ஐ.நா வரை கொண்டு செல்ல முற்படுகின்றனர். அது தவறு. அவ்வாறு ஐ.நா வரை கொண்டு செல்லப்பட்டால், நாம் பாரிய விளைவுகளை எதிர்நோக்க வேண்டியேற்படும். இந்தப் பிரச்சினையை நாம் அரசியல் ரீதியாக தீர்ப்பதற்கு முயற்சிக்க வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க செய்து கொண்ட போர் நிறுத்தத்தால்தான் விடுதலைப் புலிகள் படுகொலைகளை மேற்கொள்கின்றனர். அவர்கள் போராளிகள் அல்லர். ஜனாதிபதியாக மகிந்த பதவியேற்ற நாள் முதல் புலிகள் தமது தாக்குதல்களை ஆரம்பித்து விட்டனர்.

விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை கடந்த 30 வருட காலமாக பார்த்து வருகின்றோம். தமிழ் மக்களின் போராட்டமாக அதனை நோக்க முடியாது.

தமிழ் மக்களுக்கு பிரச்சினை உள்ளது. அவர்களுக்கு அரசியல் உரிமை மறுக்கப்பட்டுள்ளதுதான். அதனைப் பயன்படுத்தியே புலிகள் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். புலிகளின் போராட்டத்தில் தமிழ் மக்களின் அரசியல் உரிமையும் உள்ளடங்கியிருக்கிறது. ஆனால், அதனை புலிகள் பயங்கரவாதமாக்கி விட்டனர். இந்த நாட்டைப் பிரிப்பதற்கு சர்வதேசம் உடன்படாது என அவர் மேலும் தெரிவித்தார்.

# கட்சி மாறுவோரின் பட்டியலை பார்த்து ரணில் விக்கிரமசிங்க கடும் அதிர்ச்சி!

கொழும்பு —

ஐ.தே.கட்சியிலிருந்து அரசாங்கத்துக்கு செல்லும் பிரமுகர்களின் பட்டியலைப் பார்த்து ரணில் விக்கிரமசிங்க அதிர்ச்சியடைந்துள்ளதாக அந்த கட்சித் தகவல்கள் தெரிவித்தன.

ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவுடான ஆலோசனையின் போது - அரசாங்கத்துக்கு தாவ உள்ள சிலரது பெயரைக் குறிப்பிட்டு இவர்கள் எல்லாம் மாறுவார்கள் என்று நான் கற்பனை கூட செய்து பார்க்கவில்லை என்றும் ரணில் கூறியுள்ளார்.

மேலும் அமைதி முயற்சிகளுக்கு அரசாங்கத்தை நிபந்தனையின்றி ஆதரிப்பது என்ற முடிவை ஐக்கிய தேசியக்கட்சி மறுபரிசீலனை செய்ய உள்ளதாகவும் கூறப்படுகிறது.

தமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கத்துக்கு தாவ வைக்கின்ற செயற்பாடுகள் மேற்கொள்ளும்போது - அரசாங்கத்தை ஆதரிக்க வேண்டிய தேவை எமக்கு இல்லை என்று அந்தக்கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.



இதனிடையே கூட்டு அரசாங்கம் அமைப்பது தொடர்பாக ஜே.வி. பியுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருவதாக அரச தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

ஐக்கிய தேசியக் கட்சியின் அதிருப்தியாளர்களை தன்னுடன் இணைத் துக்கொள்வதை விட ஜே.வி.பியை தக்க வைத்துக் கொள்ளலாம் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முடிவு செய்திருப்பதால் இந்த நடவடிக்கைகளைத் தொடங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

# வீடில்லாதோரின் விபரங்களை அனுப்பிவைக்குமாறு சுற்றுநிருபம்

யாழ்ப்பாணம் —

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்து வீடில்லாமல் இருப்பவர்களின் விபரங்கள் மீள்குடியேற்ற அமைச்சால் திரட்டப்பட்டு வருகின்றது.

இது தொடர்பான சுற்றறிக்கை வடக்கு- கிழக்கு மாகாணத்திலுள்ள சகல பிரதேச செயலாளர்களுக்கும் துரித மீள்குடியேற்றம் மற்றும் மீள் குடியேற்ற அமைச்சின் பணிப்பாளர் நாயகம் எம்.ஏ.சி முஷீதீன் அனுப்பி வைத்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்து வீடுகள் இல்லாதோரின் விபரங்களையும், வீடுகள் கிடைக்கப் பெற்றவர்களின் விபரங்களையும் அமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறு சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் இடம் பெயர்ந்து வாழும் குடும்பங்களின் விபரங்களையும் அனுப்பி வைக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

நமது ஈழநாடு

The Leading Daily of Tamils' Homeland

# வவுனியாவில் கிளைமோர் பரபரப்பு ஏ9 வீதி போக்குவரத்துத் தடை

வவுனியா—

வவுனியா - தாண்டிக்குளம் பகுதியில் கிளைமோர் குண்டு பொருத்தப்பட்ட ஓட்டோ ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடி ஊடான போக்குவரத்து ஒரு மணி நேரம் மூடப்பட்டது.

நேற்று நண்பகல் 12.30 மணியளவில் வவுனியா - தாண்டிக்குளப் பகுதியில் ஏ9வீதி ஊடாக வந்து கொண்டிருந்த ஓட்டோவை வழி மறித்த வேளை - சாரதி ஓட்டோவை விட்டு தப்பி ஓடியதை அடுத்து அதனைச் சோதனையிட்ட படையினர் அதில் பொருத்தப்பட்டிருந்த 10 கிலோ நிறையுடைய கிளைமோர் குண்டொன்றை மீட்டனர்.

இதனை அடுத்து தப்பியோடிய ஓட்டோச்சாரதியை பிடிப்பதற்காக ஓமந்தை ஊடான ஏ9 வீதியைத் தற்காலிகமாக மூடப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

ஓமந்தை இராணுவ சோதனைச் சாவடி மூடப்பட்டதையடுத்து பெருமளவான இராணுவத்தினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டு தேடுதல் நடத்தினர். சுமார் ஒரு மணி நேரத்தின் பின்னர் ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியூடான போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டது.

எனினும், ஓட்டோவிலிருந்து தப்பியோடிய நபரை கைது செய்ததாக படையினரால் எந்தத் தகவலும் தெரிவிக்கப்படவில்லை.

இந்தச் சம்பவத்தின் பின்னர் வவுனியா நகர், மற்றும் தாண்டிக்குளம் ஊடாக ஓமந்தை வரையான போக்குவரத்தில் ஈடுபட்ட மக்கள் கடுமையான சோதனைக்குட்படுத்தப்பட்டதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

# படையினரின் கிளைமோர் தாக்குதல்; விளாத்திக்குளத்தில் இளைஞர் பலி!

வவுனியா—

வவுனியாவில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள விளாத்திக்குளம் காட்டுப் பகுதியில் இராணுவத்தின் ஆழ ஊடுருவித் தாக்கும் படையணியினர் மேற்கொண்ட கிளைமோர் தாக்குதலில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

வவுனியாவுக்குத் தென்மேற்கே 20 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான விளாத்திக்குளத்துக்குள் ஊடுருவி இராணுவத்தினர் இந்தத் தாக்குதலை மேற்கொண்டனர்.

இரணை இலுப்பைக்குளம் இராணுவ முகாமைச் சேர்ந்த ஆழ ஊடுருவும் அணியினரால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இரணை இலுப்பைக் குளத்திலிருந்து 4 கி.மீ தொலைவில் விளாத்திக்குளம் உள்ளது. இங்கு சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பொதுமகனே இந்தக் கிளைமோர் தாக்குதலில் சிக்கி உயிரிழந்தார்.

இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டவர் சுப்பிரமணியம் ஜெயரூபன் (வயது 24) என அடையாளம் காணப்பட்டார்.

கடந்த ஒரு மாதத்துக்கு முன்னரே திருமணமான இந்த இளைஞர் பால் வாங்குவதற்காகச் சென்று கொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.

## பேத்தாளையில்...

கோப்ரல் விஜிதகுமார உயிரிழந்தார்.

மற்றொரு சிப்பாய் தொடர்ந்து அங்கேயே சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச்சம்பவத்தை அடுத்து அந்தப்பகுதி படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு கடுமையான சோதனைக்குள்ளாக்கப்பட்டது.

## கடலுக்குச்...

கரையொதுங்கிக் கிடந் தன.

இவர்கள் சடலங்களாகக் கரையொதுங்கிய சம்பவம் தொடர்பாக அந்தப் பகுதி மக்கள் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்த போதும், பொலிஸார் அந்தப் பகுதியிலிருந்து சடலங்கள் இரண்டையும் மீட்க நடவடிக்கை எடுக்கவில்லை என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

## குப்பிளானில்...

மேற்கொண்டதுடன், சடலத்தை மருத்துவ பரிசோதனை செய்த பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தர விட்டார்.

இதனையடுத்து, சடலம் நேற்றுப் பிற்பகல் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு வைத்திய பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை, உயிரிழந்த நபர் கடந்த வாரம் வன்னியில் இருந்து தனது சொந்த இடமான ஏழாலைக்கு வந்ததாகவும் அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

## வவுனியாவில்....

புளியங்குளம் இராணுவநிலை மீது இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து சிறிய ஆயுதங்கள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டது.

அப்போது கடமையில் இருந்த லான்ஸ் கோப்ரல் பண்டார இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

எனினும், அங்கு அவர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்று வருகிறன.

## ஈ.பி.டி.பி....

சுட்டுவிட்டு தப்பிச் சென்றதாக தெரியவருகிறது.

உயிரிழந்தவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு மருத்துவ பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர் - கடந்த மார்ச் மாதம் நடைபெறவிருந்த உள்ளூராட்சி சபை தேர்தலில் ஈ.பி.டி.பி சார்பில் போட்டியிடுவதற்காக வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டவர் என தெரியவருகிறது.

# மீனவர்களைக் காணவில்லை

வடமராட்சி—

வடமராட்சியில் கடலுக்குச் சென்ற மீனவர்கள் வீடு திரும்பவில்லை என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை - சக்கோட்டையைச் சேர்ந்த தேவசகாயம் சாந்தகுமார், சூசைப்பிள்ளை றெஜினோல்ட் ஆகிய இருவருமே காணாமற்போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் மாலை தொழிலுக்குச் சென்ற இருவரும் நேற்று மாலை வரை வீடு திரும்பவில்லை என உறவினர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, தொழிலை முடித்துக் கொண்டு கரை திரும்பிக்கொண்டிருந்த மீனவர்களின் படகை சோதனையிட்ட கடற்படையினர் இரு இளைஞர்களையும் கைது செய்ததாக ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன.

## மற்றுமொரு...

அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

அதேவேளை - களுதாவளையில் நேற்றுக் காலை கிளைமோர் குண்டொன்று விசேட அதிரடிப்படையால் மீட்கப்பட்டது.

# தன்னாட்சியை வலியுறுத்தி...

என எழுப்பிய முழக்கம் .......னக் கிழித்தது.

காலை 10 மணிக்கு முன்னரே நாடாளுமன்றக் கட்டட முன்றலில் கூடிய மக்கள் தொகை நேரம் செல்லச் செல்ல அதிகரித்துக் கொண்டிருந்தது.

இந்த நிகழ்வில் சந்திரிகா குமாரதுங்கவின் உறவினரும் ஈழத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்கு தொடர்ந்து தீவிர ஆதரவளித்து வருபவருமான டொக்டர் கலாநிதி பிறையன் செனிவிரட்ன உரையாற்றினார்.

அவுஸ்ரேலிய நாடாளுமன்றின் லிபரல் மற்றும் தொழிலாளர் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் இந்த ஒன்று கூடலில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

### நியூசிலாந்தில்

ஐரோப்பிய ஒன்றியத்தின் விடுதலைப் புலிகள் மீதான தடையை எதிர்த்தும், சர்வதேசத்துக்கு தமிழர் தரப்பின் நிலைப்பாடுகளை வலியுறுத்துவதுமான உரிமைக்குரல் நிகழ்வு நியூசிலாந்திலும் நடைபெற்றது.

நியூசிலாந்து நேரப்படி காலை 8 மணிக்கு ஆரம்பமான நிகழ்வு நியூசிலாந்து ஓட்டோ சதுக்கத்தில் தமிழ்த் தாய் வாழ்த்து நிகழ்வோடு ஆரம்பமாகியது.

நியூசிலாந்து தமிழ் அமைப்புக்களின் ஒன்றியம் இந்த உரிமைக்குரல் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

தாயகத்தில் இடம்பெற்றுவரும் படுகொலைகள், வன்முறைகள் தொடர்பான விடயங்கள், மனித உரிமைகள் செயற்பாடுகள் தொடர்பாக நியூசிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், அரசுக்கும் உரிமைக் குரல் நிகழ்வினூடாக வலியுறுத்தினர்.

### இத்தாலியில்

ஐந்து அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தும் உரிமைக் குரல் எழுச்சி நிகழ்வு இத்தாலியிலும் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

நேற்றுக் காலை 10 மணிக்கு பியாட்சா பொலித்தியாமவிலிருந்து ஆரம்பித்த பேரணி வியாக்கவூரில் உள்ள உள்நாட்டு அமைச்சு முன்றலை மதியம் 12 மணிக்கு சென்றடைந்தது. அங்கு கோரிக்கைகள் அடங்கிய மனு உள்துறை அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

### பின்லாந்தில்

இதனிடையே தாயக உறவுகள் மீதான சிங்களத்தின் படுகொலைகளைக் கண்டித்தும், சர்வதேச சமூகத்தின் நியாயமற்ற செயற்பாட்டைக் கண்டித்தும் புலம்பெயர் தமிழர்களின் உரிமைக்குரல் நிகழ்வு பின்லாந்து நாட்டிலும் பேரெழுச்சியுடன் நடைபெற்றது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் - சிங்கள இராணுவத்தின் அண்மைக் கால படுகொலைகளைச் சித்திரிக்கும் படங்கள் மற்றும் வாசகங்களை உள்ளடக்கிய பதாகைகளை மக்கள் ஏந்தியிருந்ததுடன் படுகொலைகளை நிறுத்துமாறு சர்வதேசத்திடம் வலியுறுத்தினர்.

### சுவிஸில்

கொட்டும் மழைக்கு மத்தியிலும் சுவிஸ் பேர்ண் நாடாளுமன்றத்துக்கு முன்பாக மூவாயிரத்துக்கு மேற்பட்ட ஈழத் தமிழர்கள் தமது உரிமைக் குரலை வெளிப்படுத்தும் முகமாக ஓங்கி ஒலித்தனர்.

பேர்ண் நாடாளுமன்றம் முன்பாக நேற்றுப் பிற்கல் 1.45 மணிக்கு ஆரம்பமாகிய இந்த நிகழ்வில் பொதுச் சுடரை சுவிஸ் தேவாலயப் பங்குத் தந்தை ஏற்றிவைத்தார். இதனைத் தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டது.

இந்த ஒன்றுகூடலில் கலந்து கொண்ட அனைவரது கைகளிலும் தமிழ் மக்களின் துன்பங்களை எடுத்துரைக்கும் பதாகைகள் குறிப்பாக, ஐரோப்பிய யூனியனே நீயுமா? போன்றன காணப்பட்டன.

எங்கள் தாகம் தமிழீழத் தாயகமே, எங்கள் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன், எங்களை சுயநிர்ணய உரிமையுடன் வாழவிடு அல்லது பிரிந்து செல்ல அங்கீகரி போன்ற உணர்ச்சி பொங்கும் உண்மை நிலைகளை வெளிப்படுத்துகின்ற கோஷங்களை சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரும் எழுப்பினர்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐவர் கலந்து கொண்டு உரையாற்றினர். இவர்களின் உரையைத் தொடர்ந்து தமிழர் பேரவை அமைப்பினர் நாடாளுமன்றக் கட்டடத்துக்குள் சென்று மனுக்களைக் கையளித்தனர்.

### நோர்வேயில்

தமிழ் மக்கள் மீதான இலங்கை அரச படைகளின் இனப்படுகொலைகள் நிறுத்தப்படவேண்டும் அரச பயங்கரவாதம் மற்றும் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை நோர்வே மற்றும் அனைத்துலக நாடுகள் கண்டிக்க வேண்டும்என்று வலியுறுத்தி நோர்வேவாழ் தமிழ் மக்களின் மாபெரும் கண்டனப் பேரணி நேற்று நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்றது.

நோர்வே நேரம் நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு நோர்வே வெளியுறவு அமைச்சக முன்றலில் ஆரம்பமான கண்டனப் பேரணியில் - சுமார் 2 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட ஈழத் தமிழ் மக்கள் கலந்து கொண்டு தாயகத்து உறவுகளின் விடுதலை வேணவாவின் உரிமைக் குரலாய் ஒலித்தனர்.

ஒஸ்லோ மாநகரத்திலிருந்து மட்டுமல்லாமல், புற நகர்ப் பகுதிகள் மற்றும் ஏனைய பிரதேசங்களிலுருந்தும் மக்கள் வருகை தந்திருந்தனர்.

### ஜேர்மனியில்

புலம்பெயர் தமிழர்களின் ஒருமித்த எழுச்சியான உரிமைக்குரல் நிகழ்வு நேற்று ஜேர்மனியில் பேரெழுச்சியுடன் நடைபெற்றது.

டிசுல்டோம் நகரின் பிரதான ரயில் நிலையத்துக்கு முன்னால் பெருமளவில் திரண்ட தமிழ் மக்கள் பேரணியாக ஜேர்மனிய நாடாளுமன்றம் வரை சென்று உரிமைக் குரல் எழுப்பினர்.

தமிழீழத் தேசியக் கொடி, தமிழீழத் தேசிய தலைவரின் படம் மற்று சிங்கள இராணுவத்தின் படுகொலைகளைச் சித்தரிக்கும் படங்கள் தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறு ஜேர்மனிய நாடாளுமன்றின் முன்னர் உரிமை முழக்கம் எழுப்பினர்.

### டென்மார்க்கில்

உரிமைக்குரல் எழுச்சிப் பேரணி டென்மார்க் தலைநகர கொப்பன் கேகனில் எழுச்சியுடன் நடைபெற்றது.

கடும் குளிருக்கும் மத்தியிலும் உரிமைக்குரல் பேரணியில் கலந்து கொண்ட மக்கள் டென்மார்க்கே, ஐரோப்பிய ஒன்றியமே புலிகளைத் தடைசெய்யாதே! என்று கோஷங்கள் எழுப்பப்பட்டதோடு பதாகைகளும் எடுத்துச் சென்றனர்.

### நெதர்லாந்தில்

நெதர்லாந்தின் தலைநகர் டென்காக்கில் நாடாளுமன்றக் கட்டடத்துக்கு முன்னால் நேற்றுக் காலை 11 மணிக்கு ஆரம்பமான உரிமைக் குரல் எழுச்சி ஒன்றுகூடல் நிகழ்வில் பலநூற்றுக்கணக்கான தமிழ்மக்கள் தமது எழுச்சியை வெளிப்படுத்தினர்.

இங்கு தாயகத்தில் தொடரும் தமிழ் மக்கள் மீதான படுகொலைகளைக் கண்டித்தும் தமிழ் மக்களின் விடிவுக்கும், சுதந்திரத்துக்கும் போராடி பொறுமையின் விளிம்பில் நிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் தேசியத் தலைமை என்பதை வலியுறுத்தியும், தமிழீழ விடுதலைப் புலிகள்மீது ஐரோப்பி யூனியன் கொண்டுவரவிருக்கும் தடையைக் கண்டித்தும் -

தமிழர் தன்னாட்சியுடன் வாழ வழிசெய் அல்லது நாம் பிரிந்து போவதை அங்கீகரி என உரிமை முழக்கம் எழுப்பப்பட்டது.

# மரண அறிவித்தல்கள்

## முருகதாஸ் சுஜித்தா



இருபாலை விதானையார் வீதியைப் பிறப்பிடமாகவும், கலைமணி வீதி கட்டப்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட முருகதாஸ் சுஜித்தா 29.05.2006 நேற்று அகால மரணமானார்.

அன்னார் முருகதாசின் அன்பு மனைவியும், சிறோயனின் அன்புத் தாயாரும், சிவசுப்பிரமணியம் கமலாதேவி தம்பதிகளின் ஏக புத்திரியும், சுகந்தன் (லண்டன்), சுதாகரன் (சிவஜோதி அச்சகம்) ஆகியோரின்அன்புச் சகோதரியும், சர்வமங்களேஸ்வரி, அனிதா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை 30-05-2006 இன்று பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செங்குந்தா இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கலைமணி வீதி,*
*கட்டப்பிராய்.*

(2287)

தகவல்
**குடும்பத்தினர்.**

## சின்னத்துரை மகேந்திரன்



இராசாவின் தோட்டம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சின்னத்துரை மகேந்திரன் அவர்கள் 29.05.2006 நேற்று காலமாகிவிட்டார்.

அன்னார் சின்னத்துரை அருளம்மாவின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஜோசப் மற்றும் அக்னஸ், சரஸ்வதி, சறோஜினி, தவம், சாந்தினி (ஆசிரியர், யா/திருக்குடும்ப கன்னியர்மடம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கோமதி, றொஷான், தயானி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*215/9, இராசாவின் தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.*

(C/5364)

தகவல்
**அ.செபஸ்ரியன்.**

பெற்றோர்களே:
உங்கள் பிள்ளைகளைத் தினந்தோறும் பாடசாலைக்கு அனுப்பிவையுங்கள்
"மனித வாழ்வில் நாம் தேடும் மாபெரும் தேடல் கல்வியே"
பெற்றோர்களே சிந்தியுங்கள்!
REERDO Unicef
குளப்பிட்டி வீதி, உயரப்புலம், ஆனைக்கோட்டை,
REERDO
[C/535?]

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 30.05.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.